குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய ஆசியுரை

திருச்சிற்றம்பலம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்

பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத

சீதவள வயல்புகலித் திருஞான சம்பந்தர்

பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். -தி.12 பு.28 பா. 1

வேதம், சிவாகமம், புராணம், இதிகாசம், திருமுறைகள், சித் தாந்த சாத்திரங்களே நமது சைவசமயத்தின் அடிப்படைச் சட்ட நூல்க ளாகும். சிவநெறி கடைப்பிடிப்போர் இந்நூல்களின் வரையறைகளின் படியே நடக்கவேண்டும். நடவாதார் சைவத்திற்குப் புறம்பானவராவர்.

இந்தியப் பேரரசின் அடிப்படைச் சட்டம், அரசியலமைப்பு என்று சொல்லப்பெறும். இந்தியப் பேரரசின் மாநிலங்கள் அனைத்தும் அரசியலமைப்பு என்னும் இந்த அடிப்படைச் சட்டத்தைப் போற்றி மதித்தே நடந்துகொள்ள வேண்டும்.

அதைப்போலவேதான், சைவத்தின் அடிப்படைச் சட்டமாக விளங்குவது, வேதாகம, புராணதிகாச, திருமுறை, சித்தாந்த சாத்திரங்களாகும். ஆகவே இவற்றைப் போற்றியும், மதித்தும் நடந்து கொள்ளவேண்டும் என்பதே விதியாகும்.

அவரவர்களும் மனம் போன போக்கெல்லாம் போய்த் தனிவழி காண்பார்களானால் நாட்டின் ஒழுங்குமுறை கெட்டுச் சிதறிப் போக ஏதுவாகும். இதைச் சைவர்கள் அனைவரும் உணர்ந்து ஒழுங்கு முறையைக் கடைப்பிடித்து நடந்து கொள்ள வேண்டியது மிக மிக அவசியமாகும்.

வேதம்:

வேதம் என்ற சொல், வித் என்ற வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியது. வேதம் என்பதற்கு அறிவுநூல் என்பதே பொருள்.

அறிவுநூலாகிய வேதம், இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு பகுதிகளாக விளங்குகிறது.

வேதம் என்னும் சொல்லுக்குப் பொருள் - காண்டல், கருதல் முதலிய அளவைகளுக்குப் புலப்படாததாய், வாழ்க்கைக்கு நன்மை பயக்கும் நெறி முறைகளை அறிவிப்பதாய் உள்ள - அறிவுநூல் என்பதாகும்.

வித்-ஞானே என்பதாலும், வித் என்ற சொல்லுக்கு ஞானம் என்பதே பொருள். அஃதாவது நிச்சய ஞானம். நிச்சயம் என்பது நிலையானது; மாறுபாடு இல்லாதது. எனவே உண்மை ஞானத்தை உணர்த்தும் நூலுக்கு வேதம் என்பது பெயராயிற்று.

வேதங்களின் அங்கமாக உள்ள ஆறு அங்கங்களையும் முறையாகக் கற்றுத் தெளிந்தால்தான், வேதங்கள் நமக்குத் தெளிவா கப் புரியும். எதுபோல எனின், நன்னூல் என்னும் செந்தமிழ் இலக்கண நூலைக் கற்றுத் தெளிவு பெற வேண்டுமானால், அதற்கு முதற்படியாக விளங்கும் சிற்றிலக்கியங்கள், நிகண்டு நூல்களைக் கற்றால்தான், நன்னூல் என்னும் செந்தமிழ் இலக்கண நூல் இனிது விளங்கும்.

இது பற்றி, "நன்றாய்ந்த.... ஈரிரண்டின் ஆறுணர்ந்த ஒரு முதுநூல்" என்ற புறநானூறு, 166ஆம் பாடல் குறிப்பிடுவது காண்க. ஈரிரண்டு என்பது நான்கு பகுதியாக உள்ள வேதங்கள் என்றும், ஆறுணர்ந்த என்பது ஆறு அங்கங்களால் உணர்த்தப்பட்டது என்றும், ஒரு முதுநூல் என்பது ஒப்பற்ற பழைய நூலாகிய வேதம் என்றும் பொருள் தரும். ஆறங்கமாவன 1. சிட்சை, 2. கற்பசூத்திரம்,

3. வியாகரணம், 4. நிருத்தம், 5. சந்தோவிசிதி, 6. சோதிடம் என்பனவாகும்.

1. வேதங்களை எடுத்தல், படுத்தல், நலிதல் முதலிய இசை வேறுபாட்டால் உச்சரிக்குமாற்றை உணர்த்துவது, சிட்சை.

2. வேதங்கள் கூறும் நெறிமுறைகளை அநுட்டிக்குமாற்றை உணர்த்துவது, கற்பசூத்திரம்.

3. வேதங்களின் எழுத்து, சொல், பொருளியல்புகளை உணர்த் துவது, வியாகரணம்.

4. வேதங்களின் சொற்பொருள் உணர்த்துவது, நிருத்தம்.

5. வேதமந்திரங்களில் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரும், அவற்றிற்குரிய எழுத்து இனைத்தென்றலும் உணர்த்துவது, சந்தோவிசிதி.

`. வேதங்களில் சொல்லப்படும் கருத்துக்களைச் செய்தற் குரிய கால விசேடங்களை உணர்த்துவது, சோதிடம்.

மேலும் புராணம், நியாயம், மீமாம்சம், ஸ்மிருதி என்னும் நான்கும் உபாங்கங்கள் எனப்படும்.

வேதம், உலக மக்களுக்குப் பொது அறம் போதிப்பது. சிவாகமம், சத்தினிபாதத்து உத்தமர்களுக்குச் சிறப்பறம் போதிப்பதாகும்.

வேதம் பற்றித் திருமூலர் அருள்வது காண்க.

வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்

ஓதத் தகும்அறம் எல்லாம் உளதர்க்க

வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற

வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே. (தி.10 பா.96)

வேதம் ஒவ்வொன்றும், கர்ம காண்டம், ஞானகாண்டம் என இரு பிரிவுகளையுடையது.

கர்மகாண்டம், செயல்முறைகளைப்பற்றிக் கூறுவது. ஞான காண்டம் உபநிடதங்களால் தத்துவ விசாரணை செய்வது.

யசுர் வேதத்தின் நடுப்பகுதியில் "நமசிவாயச சிவதராய\u2970?" என்னும் பஞ்சாட்சரம் அமைந்துள்ளது. எனவே, வேதம் சிவபரத்துவத் தைக் கூறுவதாகவே விளங்குகிறது.

சமயாசாரியருள் ஞானசம்பந்தர் கூற்று

வேதத்தை அருளிச் செய்தவர் சிவபெருமானே என்றும், வேதத் திற்குப் பொருள் உரைத்தவரும் அவரே என்றும் இருக்கு மறைப் பிள் ளையாராகிய திருஞானசம்பந்தர் அருள்கிறார்.

"மங்கையர்க்கரசி" (தி.3 ப.120 பா.1) என்று தொடங்கும் பதிகத்தின் முதற்பாடலின் மூன்றாம் அடியில், "பொங்கழ லுருவன் பூதநா யகன்நால் வேதமும் பொருள்களும் அருளி" (தி.3 ப.120 பா.1) என்று பாடியுள்ளார்.

அவரே திருமுதுகுன்றத் தேவாரத்தில், "அறங்கிளரு நால்வேத மாலின்கீ ழிருந்தருளி" (தி.1 ப.131 பா.7) என்று அருளிய இடத்தையும் குறிப்பிட்டுள்ளார். அறம், பொருள், இன்பம், வீடு என்று நான்கையும் வகுத்து, வேதம் அறிவிப்பதால் வேதத்தையே அறம் என்ற சொல்லில் அருள்கின்றார் . அது வருமாறு:

நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு

மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறத்தை

ஆலடைந்த நீழன்மேவி யருமறை சொன்னதென்னே

சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே. (தி.1 ப.48 பா.1)

என்று சேய்ஞலூர்த் தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நான்கு வகையான புருடார்த்தங்கள்:

திருமுதுகுன்றத் தேவாரத்தில்,

சுழிந்தகங்கை தோய்ந்ததிங்கட் டொல்லரா நல்லிதழி

சழிந்தசென்னிச் சைவவேடந் தான்நினைந் தைம்புலனும்

அழிந்தசிந்தை யந்தணாளர்க் கறம்பொருளின் பம்வீடு

மொழிந்தவாயான் முக்கணாதி மேயதுமு துகுன்றே. (தி.1 ப.53 பா.6)

என்று அறம் மட்டும் அல்லாமல் பொருள், இன்பம், வீடு ஆகிய புருடார்த்தங்கள் நான்கையுமே ஓதி உணர்த்தியுள்ளது வேதம் என்று கூறியுள்ளார்.

வேதத்தை உலக மக்களுக்காகச் சொன்னதோடு தாமே ஓதியும் வருகிறார் என்பதைத் திருப்பழனத் தேவாரத்தில்,

"வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளை யெருதேறிப்

பூதஞ்சூழப் பொலியவருவார் புலியி னுரிதோலார்"

(தி.1 ப.67 பா.1) என்று ஞானசம்பந்தரே முதல் திருமுறையில் அருளி யுள்ளார்.

சிவபெருமான் வேதத்தை மட்டுமின்றி வேதம், ஆறங்கம், ஆகமம், பதினெண் புராணங்கள், இதிகாசங்களையும் அருளியுள்ள மையை,

எங்கு மாகிநின் றானு மியல்பறி யப்படா

மங்கை பாகங்கொண் டானு மதிசூடு மைந்தனும்

பங்க மில்பதி னெட்டொடு நான்குக் குணர்வுமாய்

அங்க மாறுஞ்சொன் னானுமை யாறுடை யையனே. (தி.2 ப.6 பா.6)

என்று திருவையாறு தேவாரத்தில் பதினெண் புராணங்களையும் நால்வேதங்கட்கு உணர்வாய் உள்ள ஆறு அங்கங்களையும் ஐயாறப் பரே சொன்னார் என்று கூறியுள்ளார்.

பாதம்விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே

வேதநான்கும் பதினெட்டொ டாறும் விரித்தார்க்கிடம்

தாதுவிண்ட மதுவுண்டு மிண்டிவரு வண்டினம்

கீதம்பாட மடமந்தி கேட்டுகளுங் கேதாரமே. (தி.2 ப.114 பா.2)

என்று திருக்கேதாரத் தேவாரத்தில், வேதம் நான்கும் பதினெண் புராணங்களும் ஆறு அங்கங்களும் விரித்தோதியவர் திருக்கேதார நாதரே என்று அருளியுள்ளார்.

கூறை போர்க்கும் தொழிலா ரமண்கூறல்

தேறல் வேண்டா தெளிமின் திருப்புத்தூர்

ஆறு நான்கு மமர்ந்தா ரவர்போலும்

ஏறு கொண்ட கொடியெம் இறையாரே. (தி.1 ப.26 பா.10)

என்று திருப்புத்தூர் தேவாரத்தில், கூறை போர்க்கும் புத்தர்களும் அம ணர்களும் கூறுவதைத் தெளியாதீர்; திருப்புத்தூர்ப் பெருமானைத் தெளிந்து போற்றுங்கள். அவர் ஆறு அங்கத்திலும் நான்கு வேதத்தி லும் அமர்ந்துள்ளார் என்று அருளியுள்ளார். அமர்ந்தார் என்பதற்கு, விரும்பி அமர்ந்துள்ளார் என்று பொருள் கொள்வதே சிறப்பாகும்.

வேதத்தை அருளிச் செய்தவனும் வேதப் பொருளாக விளங்கு பவனும் சிவபெருமானேயாவார். உலக மக்கள் குற்றம் செய்யாமல், நன்னெறி நிற்றற் பொருட்டு, அச் சிவபெருமான் அருளிய உபதேசத்தையே முதலாகக் கொண்டு சூத முனிவர் உரைத்த ஒலி மாலையாகிய பதினெண் புராணங்களும் நன்னெறியையே போதிப்பனவாம்.

இக்கருத்துள்ள பாடல் சைவ தத்துவத்தை நிலைநாட்டிய புனல் வாதப் பதிகமாகும். "வாழ்க அந்தணர்" எனத் தொடங்கும் திருப் பாசுரப் பகுதியில் எட்டாவது பாடலாக விளங்குகிறது. அப்பாடல்,

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்

ஏதப் படாமை உலகத்தவ ரேத்தல் செய்யப்

பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த

சூத னொலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே. (தி.3 ப.54 பா.8)

கலிக்கோவை - பதினெண்புராணம்:

கூன்பாண்டியனாகிய நெடுமாற பாண்டியனுக்கு உற்ற வெப்பு நோயைப் போக்கப் பாடிய, "மந்திரமாவது நீறு" பதிகத்தில் (தி.2 ப.66 பா.1), மந்திரமாவது திருஐந்தெழுத்தே என்றும், அது நினைப்பவரைக் காப்பது என்றும், அது வேதத்தின் நடுவில் உள்ளது என்றும், ஞானசம்பந்தர் குறிப்பிடுகிறார்.

திருஞானசம்பந்தர், தமது திருமண நிறைவில் எல்லோருக்கும் உபதேசமாக வழங்கியருளிய திருஐந்தெழுத்துத் திருப்பதிகம் "காதலாகி" (தி.3 ப.49 பா.1) என்பது. அப்பாடலில் "வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது, நாதன் நாமம் நமச்சிவாயவே" என்று அறிவித்துள்ளார். வேதத்தில் பசுமஜாபால உபநிடதம் என்று ஒன்று உள்ளது. அதில் திருநீறு பற்றிய விளக்கம் யாவும் தெளிவாக உள்ளது என்பதாலும் வேதத்தின் சிறப்பை உணரலாம்.

ஞானசம்பந்தர், பாண்டியனின் வெப்புநோய் தீர்ப்பதற்கு முன்பே, இருமுறை ஆலவாய் அண்ணல் கோயில் நண்ணி, "காட்டுமாவது உரித்து உரிபோர்த்து" என்ற பதிகம் (தி.3 ப.47 பா.1) பாடி "அமணர்களை ஓட்டி வாது செய்யத் திருவுளமோ?" என்று வினவி, அதில் மனம் நிறைவு பெறாது, மீண்டும் ஒரு முறை சென்று, ஆலவாய் அண்ணலிடம் "அமணர்களுடன் வாது செய்ய, பெருமானே உன் திருவுளம் யாதோ?" என்று வினவுகிறார். அப்போது பாடியதுதான்,

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்

ஆத மில்லி யமணொடு தேரரை

வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே

பாதி மாதுட னாய பரமனே. (தி.3 ப.108 பா.1)

என்று வேண்டிய பதிகம்.

அதில், ஒவ்வொரு பாடல் இறுதியிலும், "ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென், ஆலவாயில் உறையும் எம்ஆதியே" எனவும் வேண்டியுள்ளார்.

அதே பதிகத்தில், இரண்டாம் பாடலில், "வைதி கத்தின் வழியொழு காதவக் கைத வம்முடைக் காரமண் தேரரை" என்றும், "மறைவ ழக்கமி லாதமா பாவிகள்" என்றும், "அழல தோம்பு மருமறை யோர்திறம் விழல தென்னு மருகர்" என்றும், "அந்த ணாளர் புரியு மருமறை சிந்தை செய்யா அருகர் திறங்கள்" என்றும், வேதத்தைத் தூற்றும் அருகரை வென்று, வைதிக சைவத்தை மதுரையில் வைகைக் கரையில் நிலை நாட்டினார்.

வேதத்தைத் தழுவியது வைதிகம். சிவாகமத்தைத் தழுவியது சைவம். எனவேதான் "பழைய வைதிக சைவம் பரக்கவே" என்று கோயிற் புராணப் பாடல் (வாழ்த்து) குறிக்கின்றது.

மழை வழங்குக மன்னவன் ஓங்குக

பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக

தழைக அஞ்செழுத் தோசை தரையெலாம்

பழைய வைதிக சைவம் பரக்கவே. (கோயிற் புராணம்)

திருநாவுக்கரசர் கூற்று:

ஞானசம்பந்தர் அருளிய அதே நடையில் கச்சி ஏகம்பத் தேவா ரத்தில், திருநாவுக்கரசரும்,

"நல்லானை நல்லான நான்மறையோ டாறங்கம்

வல்லானை வல்லார்கண் மனத்துறையு மைந்தனை" (தி.4 ப.7 பா.7)

என்று நான்மறையையும் ஆறங்கத்தையும் போற்றி உரைக்கின்றார்.

திருச்செம்பொன்பள்ளித் தேவாரத்தில், "தந்தையும் தாயுமாகித் தானவன் ஞான மூர்த்தி, முந்திய தேவர் கூடி முறைமுறை இருக்குச் சொல்லி" (தி.4 ப.29 பா.4) என்று இருக்கு வேதத்தை ஓதி, தேவர்கள் வழிபட்டதைக் குறிக்கின்றார்.

ஆதிபுராணத் திருக்குறுந்தொகைப் பதிகத்தில் முதல் பாடலில், "வேத நாயகன் வேதியர் நாயகன்" (தி.5 ப.100 பா.1) என்று வேதத் திற்கும் வேதத்தை முறையாக ஓதும் வேதியர்கட்கும் நாயகனாக உள்ளவன் என்றும், எட்டாம் பாடலில்,

அருக்கன் பாதம் வணங்குவ ரந்தியில்

அருக்க னாவா னரனுரு வல்லனோ

இருக்கு நான்மறை யீசனை யேதொழும்

கருத்தி னைநினை யார்கன் மனவரே. (தி.5 ப.100 பா.8)

என்றும் அருளியமை காண்க. மேலும் இப்பாடலின் பொருளைக் காண்போம்.

அத்வைதம் பேசும் அந்தணர்களில் பலரும், சந்தியா காலங்க ளில் அருக்கனாகிய சூரியனை வணங்குவார்கள். அரனுக்குள்ள எட்டு உருவில் அருக்கனாகிய சூரியனும் ஒருவன் என்பதை உணராமல் சூரியனாகிய உடலையே தொழுகின்றனர். அதில் உள்ள ஈசனைத் தொழுவாரில்லை. ஆனால் இருக்கு முதலிய வேதங்கள் அருக்கனுக்குள்ளிருக்கும் ஈசனையே தொழுகின்றன. (அருக்கன் - சூரியன்). இக்கருத்தை உணராத கல் மனத்தவராய் உள்ளனரே என்று இரங்குகின்றார்.

மேலும் அப்பர், திங்களூர் அப்பூதி அடிகளின் திருமகனார் மூத்த திருநாவுக்கரசு, விடம் தீண்டி இறந்த போது, அவரை உயிர்ப்பித்த திருப்பதிகம் "ஒன்று கொலாம்" எனத் தொடங்கும், விடம் தீர்த்த திருப்பதிகமாகும். அப்பதிகப் பாடலில், "நாலுகொ லாமறை பாடின தாமே" (தி.4 ப.18 பா.4) என்று மறைகள் நான்கு என்பதைக் குறிப்பிட் டுள்ளார்.

புள்ளிருக்குவேளூர்த் தாண்டகத்தில்,

"பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்

பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்

வாராத செல்வம் வருவிப் பானை

மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்

தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னை" (தி.6 ப. 54 பா.8)

என்னும் பாடலில், மந்திரம் வேத மந்திரம் என்பதையும், தந்திரம் ஆகமம் என்பதையும், மருந்து ஐந்தெழுத்து என்பதையும் குறிப்பிட் டுள்ளார்.

ஞானசம்பந்தரும் மந்திரமாவது திருவைந்தெழுத்து என்றும், தந்திரம் என்பது சிவாகமம் என்றும் குறிப்பிட்டுள்ளமை ஒத்து நோக்கத் தக்கனவாம்.

மேலும் அப்பர், வேத, ஆகம, புராணங்கள் பற்றி அருளி உள்ள அருள் மொழிகள் சில காண்போம். தில்லைப் பெரிய திருத்தாண் டகத்தில், "அரியானை அந்தணர்தம் சிந்தை யானை அருமறையின் அகத்தானை" (தி.6 ப.1 பா.1) என்று ஓதியுள்ளார். இதில் வேதம் முழுவதிலும் உட்பொருளாய் இருக்கின்றவர் சிவமே எனக் குறிப்பிட் டுள்ளார். அதே பதிகம், ஆறாம் பாடல், இரண்டாம் அடியில் "அருமறையோ டாறங்க மாயி னானை" என்று பாடியுள்ளார்.

அடையாளத் திருத்தாண்டகம், ஐந்தாம் பாடலில் "பாடுமே ஒழியாமே நால்வே தம்மும்" (தி.6 ப.4 பா.5) என்று வேதத்தை இசையோடு பெருமானே ஓதுவதைக் குறிப்பிடுகின்றார்.

திருவதிகைப் போற்றித் திருத்தாண்டகத்தில், "நான்மறையோ டாறங்க மானாய் போற்றி" (தி.6 ப.5 பா.8) என்றும், பந்தணை நல்லூர்த் தாண்டகத்தில், "நான்மறையோ டாறங்கம் நவின்ற நாவார்" (தி.6 ப.10 பா.10) என்றும், மதுரைத் தாண்டகத்தில், "அருமறையால் நான்முகனும் மாலும் போற்றும் சீரானை" (தி.6 ப.19 பா.5) என்றும், ஆக்கூர்த் தாண்டகத்தில், "வேதத்தோ டாறங்கஞ் சொன்னார் போலும்" (தி.6 ப.21 பா.2) என்றும், திருமறைக்காட்டுத் தாண்டகத்தில், "மூலநோய் தீர்க்கும் முதல்வன் கண்டாய், முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்" (தி.6 ப.23 பா.9) என்றும் போற்றுகிறார்.

திருவாரூர்த் தாண்டகத்தில், "புண்டரிகக் கண்ணானும் பூவின் மேலைப் புத்தேளும் காண்பரிய புராணன் தான்காண்" (தி.6 ப.30 பா.9) என்று புராணனையும் புராணத்தையும் போற்றுதலையும், பெருமானைப் புராணன் என்று சொல்லுமாற்றையும் காண்கின்றோம்.

திருமழபாடித் தாண்டகத்தில், "ஓங்காரத் துட்பொருளாய் நின்றான் கண்டாய்" (தி.6 ப.39 பா.10) என்று, வேதங்கட்கெல்லாம் மூலமாய் உள்ள ஓங்காரத்தைக் குறிப்பிட்டு, அதன் உட்பொருளாய் இருப்பவன் சிவனே என்று உரைக்கின்றார்.

மழபாடியின் மற்றொரு தாண்டகப் பதிகத்தில் இரண்டாம் பாடலில், "மறைகலந்த மந்திரமும் நீரும் கொண்டு வழிபட்டார் வானாளக் கொடுத்தி யன்றே" (தி.6 ப.40 பா.2) என்று, பூவும் நீரும் கொண்டு மந்திர புட்பம் சமர்ப்பிப்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

திருஆவடுதுறைத் தாண்டகத்தில், "நம்பனை நால்வேதம் கரைகண்டானை" (தி.6 ப.46 பா.1) என்று நால்வேதம் முழுவதும் கண்டவன் சிவனே என்றும் அறிவிக்கின்றார்.

"தூயானைச் சுடர்ப்பவளச் சோதி யானை" என்னும் தாண்டகத்தின் இரண்டாம் அடியில், "சங்கரனைச் சந்தோக சாமம் ஓதும் வாயானை" (தி.6 ப.50 பா.4) என்றும், புள்ளிருக்கு வேளூர்த் தாண்டகத்தில் "ஆறங்க நால்வேதத் தப்பால் நின்ற பொருளானை" (தி.6 ப.54 பா.4) என்று, வேதங்களைக் கடந்தவன் என்றும் சொல்கின்றார்.

திருவலம்புரம் தாண்டகத்தில், "செங்கண்மால் சிலைபிடித்துச் சேனையோடும் சேதுபந்தனம் செய்து" (தி.6 ப.58 பா.10) என்று இதிகாச வரலாற்றைக் குறிப்பிடுகின்றார்.

திருவெண்ணித் திருத்தாண்டகத்தில், "பொங்குதழற் பிழம்பாய புராண னாரும்" (தி.6 ப.59 பா.1) என்று, புராணத்தை உடையவராய் உள்ளார் சிவனே என்றும், திருநாகேச்சுரத் தாண்டகத்தில், "மாயவனை மறையவனை மறையோர் தங்கள் மந்திரனைத் தந்திரனை" (தி.6 ப.66 பா.1) என்று, திருமால், பிரமன், மறைவல்ல அந்தணர்கள் போற்றும் மந்திர வடிவாய் உள்ளவனும், தந்திரமாகிய ஆகமமாக உள்ளவனும் சிவபெருமானே என்றும் அருளியுள்ளார். (தந்திரம் = ஆகமம்).

திருவாலங்காட்டுத் தாண்டகத்தில், "நான்மறையோ டாறங்கஞ் சொன்னார் தாமே" (தி.6 ப.78 பா.4) என்றும், திருப்பாசூர்த் தாண்டகத்தில், "வேதமோர் நான்காய் ஆறங்க மாகி விரிகின்ற பொருட்கெல்லாம் வித்து மாகி" (தி.6 ப.83 பா.4) என்றும், வேத, ஆகம, புராண, இதிகாசம் பற்றி நாவுக்கரசர் அருளியவற்றை ஒரு சிறிது கண்டோம்.

சுந்தரர் கூற்று:

"அங்கம் ஆறும்மா மறைஒரு நான்கும் ஆய நம்பனை" (தி.7 ப.62 பா.2) பெருமான், ஆறு அங்கமாகவும் நால் வேதமாகவும் உள்ளவன் என்கிறார், சுந்தரர்.

திருவீழிமிழலைத் தேவாரத்தில், "வேத வேதியர் வேத நீதிய தோது வார்விரி நீர்மி ழலையுள்" (தி.7 ப.88 பா.10), வேதியர்கள் வேதத்தையும் வேதநீதியையும் ஓதி வந்துள்ளனர் என்பதை இப்பாடற் பகுதி அறிவிக்கின்றது.

திருநனிபள்ளித் தேவாரத்தில், "அங்கமொ ராறவையும் அரு மாமறை வேள்விகளும், எங்கும் இருந்தந்தணர் எரி மூன்றவை யோம்புமிடம்" (தி.7 ப.97 பா.7) என்று குறிப்பிட்டுள்ளார்.

திருக்கானப்பேர்த் தேவாரத்தில், "தொண்டர் தமக்கெளிய சோதியை" என்னும் பாடலின் மூன்றாம் அடியில், "அண்டனை அண்டர்தமக் காகம நூல்மொழியும் ஆதியை" (தி.7 ப.84 பா.8) என்றும், பரவையுள் மண்டளித் தேவாரத்தில், "அம்மானே ஆகம சீலர்க் கருள்நல்கும் பெம்மானே" (தி.7 ப.96 பா.6) என்றும், நொடித்தான் மலைத் தேவாரத்தில், "அரவொலி ஆகமங்கள் அறி வார்அறி தோத்திரங்கள்" (தி.7 ப.100 பா.8) என்னும் பாடலில், ஆகமங்கள் பேசப்படுகின்றமை காண்க.

திருமுருகன்பூண்டித் தேவாரத்தில், "தயங்கு தோலை உடுத்துச் சங்கர சாம வேதமோதி" (தி.7 ப.49 பா.5) என்றும், "வேத மோதிவெண் ணீறுபூசி" (தி.7 ப.49 பா.7) என்றும், திருஆமாத்தூர்த் தேவாரத்தில், "காண்டனன் காண்டனன்" என்னும் பதிகத்தின் முதல் பாடலில் நான்காம் அடியில், "மீண்டனன் மீண்டனன் வேதவித் தல்லா தவர்கட்கே" (தி.7 ப.45 பா.1) என்று, வேத வித்தல்லாத பாதகர்களிட மிருந்து மீண்டேன் மீண்டேன் என்று இருமுறை குறிப்பிடுகின்றார்.

"நம்பி னார்க்கருள் செய்யும் அந்தணர் நான்ம றைக்கிட மாய வேள்வியுள்" (தி.7 ப.88 பா.1) என்றும், "தொண்டர் தமக்கெளிய சோதியை" (தி.7 ப.84 பா.8) என்றும், "அண்டனை அண்டர்தமக் காகம நூல்மொழியும் ஆதியை" (தி.7 ப.84 பா.8) என்றும், மேலே உள்ள பல கூற்றுகளாலும், வேதாகம புராண இதிகாசங்களைச் சுந்தரர் போற்றியுள்ளமை காணலாம்.

மாணிக்கவாசகர் கூற்று:

மணிவாசகரின் சிவபுராணத்தில், "வேதங்கள் ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" (தி.8 ப.1 வரி 34,35) என்று பேசுகின்றது. ஐயா எனின், சிவபெருமானையே தலைவன் என்று வேதம் குறிப்பிடுவதாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக உயர்ந்தவன் என்றும், எல்லாவற் றிற்கும் கீழாக ஆழ்ந்தவன் என்றும், எல்லாவற்றிற்கும் மேலாக அகன் றவன் என்றும், எல்லாவற்றிற்கும் நுண்பொருளாய் உள்ளவன் என்ப தால் நுண்ணியன் என்றும் கூறியுள்ள சிறப்பைக் காண்க.

வேதம் பொது நூலாதலின், அங்கு பாலில் நெய் இருப்பதைப் போல விளங்காதிருப்பான் இறைவன். சிவாகமம் சிறப்பு நூலாதலின் அங்கு, தயிரில் நெய்போல இனிது விளங்கித் தோன்றுவான். இதனாலேயே, "ஆகம மாகிநின் றண்ணிப்பான்" (தி.8 ப.1 வரி 4) என்றார். அண்ணித்தல் = இனித்தல்.

கீர்த்தித் திருவகவலில், "மன்னு மாமலை மகேந்திர மதனிற் சொன்ன ஆகமந் தோற்றுவித் தருளியும்" (தி.8 ப.2 வரி 9, 10) என்று சொல்லியுள்ளார். தென்பாண்டி நாட்டில், திருக்குறுங்குடி என்னும் வைணவத் தலத்தின் மேல்பால் மகேந்திரமலை உள்ளது.

திருப்படையாட்சி - நான்காம் பாடலின் மூன்றாம் அடியில், "மாமறை யும்அறி யாமலர்ப் பாதம்" (தி.8 ப.49 பா.4) என்றும், அன்னைப் பத்தின் முதல் பாடலில், "வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர் நாதப் பறையினர்" (தி.8 ப.17 பா.1) என்றும், வேதங்களாகிய சொல்லை உடையவர் என்பதோடு மூலமாய் உள்ள, நாத தத்துவமாகிய பறையையும் உடையவர் என்கிறார்.

கண்ட பத்தில், "நான்குமறை பயில்தில்லை யம்பலத்தே கண்டேனே" (தி.8 ப.31 பா.9) என்றும், "வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே" (தி.8 ப.31 பா.10) என்றும், திருவேசற வில், "மூத்தானே மூவாத முதலானே முடிவில்லா ஓத்தானே பொருளானே" (தி.8 ப.38 பா.10) என்று, எல்லாப் பொருள்களுக்கும் முன்னவன், மூவாத இறையவன், மூப்படையா ஓத்து - வேதமாய் உள்ளவன் என்னும் பொருள் வருமாறு போற்றுகிறார்.

குழைத்த பத்தில், "புகழே பெரிய பதம்எனக்குப் புராண நீதந் தருளாதே" (தி.8 ப.33 பா.10) என்று புராணன் என்ற பொருளில் குறிப்பிடுகின்றார். புராணன் என்பதற்கு, மிகப் பழமைக்கெல்லாம் பழமையாய் உள்ளவன் என்பதே பொருளாம்.

இவ்வருள்மொழிகளால், மணிவாசகரும் வேதாகம புராணங் கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளமையை ஒருவாற்றான் அறியலாம்.

மூவகை உபதேசம்:

வேத, சிவாகமம், புராண இதிகாசங்கள் மக்கட்கு (மறைப் பொருளை) எப்படி உபதேசிக்கின்றன என்பதை முன்னோர் மூன்று வகையாகக் கூறியுள்ளமை பற்றிக் காண்போம்.

உபதேசம் செய்வதை மூவகையாகப் பகுத்துள்ளனர் முன்னோர். அவை பிரபு சம்ஹிதை, காந்தா சம்ஹிதை, சுகிருத் சம்ஹிதை என்பனவாம்.

பிரபு சம்ஹிதை என்பது அரசன் உத்தரவு (ஆணை) இடுவது போன்றது.

காந்தா சம்ஹிதை என்பது, மனைவி கணவனுக்கு இதமாகவும், பதமாகவும், சொல்வது போன்றது.

சுகிருத் சம்ஹிதை என்பது, நண்பன் நண்பனுக்குச் சொல்வது போன்றது.

சம்ஹிதை என்பதற்கு, சொல்லும் முறை என்பது பொருள். அரசன் (பிரபு) ஆணை இட்டுச் சொல்வது போல் வேதம், ஆகமம் இரண்டும் இன்னது செய்க, இன்னது தவிர்க்க என்று உத்தரவிடும்.

மனைவி கணவனுக்கு இதமாகவும், பதமாகவும் நன்மைகளை எடுத்துச் சொல்வது போல், புராணம் நயமாகச் சொல்லும்.

சுகிருத் - நண்பன், தன் நண்பனுக்கு இதமாகவும், பதமாகவும் சொல்வதுடன், இடித்தும் சொல்வான். இதிகாசம் நண்பன் நண்பனுக்குச் சொல்வதைப் போலச் சொல்லும்.

எனவே, அரசன் பணியாளர்க்கு ஆணையிடுவதுபோலவும், மனைவி கணவனுக்கு இதமாகச் சொல்வது போலவும், நண்பன் நண்பனுக்கு சொல்வது போலவும் சொல்லும் இவற்றையெல்லாம் நாம், நம் பன்னிரு திருமுறைகளிலும் காணலாம்.

ஞானசம்பந்தர் தேவாரத்தில் பிரபு சம்ஹிதை போலவும், அப்பர் தேவாரத்தில் காந்தா சம்ஹிதை போலவும், சுந்தரர் தேவாரத்தில் சுகிருத் சம்ஹிதை போலவும் உபதேசங்கள் வருவதை ஆங்காங்குக் காணலாம்.